# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.68/2020 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Petitioner<br>Respondent<br>Court | அ.சா.1 |
| Name : | | ஜானகி |
| Father's/Husband Name: | | கலியபெருமாள் |
| Village : | | கொளத்தூர் |
| Taluk : | | ஆலத்தூர் |
| Age : | | 43/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.06.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொளத்தூரில் பஞ்சாயத்து ஆபிசில் துப்புறவு பணியாளராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது கணவர் இறந்து 8 வருடம் ஆகிறது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு எதிரி அன்புதுரைக்கு 4 பவுன் நகையும் இரண்டு லட்சம் பணமும் வீட்டு செலவிற்காக கொடுத்து இருந்தேன். அதன் பிறகு பல முறை நான் பணத்தை திரும்ப கேட்டேன் தரவில்லை. 19.05.2019-ம் தேதி காலை 8.00 மணியளவில் எதிரி அன்புதுரை வீட்டின் வாசலில் நின்று எனது மகன் ஆதித்யன் பணம் கேட்டான். அன்புதுரை வீட்டிற்கு வெளியே வந்து தேவடியா பயலே என்று இங்கு வந்து பணம் கேக்குற என்று சொல்லி ஆதித்யனை அடித்து விட்டார்கள். இதை பார்த்த எங்கள் ஊர் பூசாரி கர்ணன் அன்புதுரை வீட்டு வாசலில் என் மகன் ஆதித்யனை அடிப்பதாக கூறினார். நான் உடனே அன்புதுரையின் வீட்டிற்கு சென்று ஏன் பணம் கேட்டு வந்த பிள்ளையை அடிக்கிறீர்கள் என கேட்டேன். ஏன்டி தேவடியா நான் ஏன் உனக்கு பணம் தரனும் என்று அன்புதுரை கேட்டார். எதிரி பானுமதி என்னை விலக்கமாற்றால் அடித்து விட்டார். அன்புதுரை எனது மகன் ஆதித்யனை அங்கே இருந்த கம்பியை எடுத்து காட்டி இதற்கு மேல் பணம் கேட்டு வந்தால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார். எதிரி சிவகுமாரும் பானுமதியும் எனது மகன் ஆதித்யனை கண்ணத்தில் ஓங்கி அறைந்து விட்டார்கள். எனக்கு கழுத்து முகத்தில் காயம் ஆகிவிட்டதால் போக்கு வண்டி பிடித்து பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த போது மருவத்தூர் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மருத்துவமனையில் போலிசார் என்னிடம் விசாரித்த போது நான் வாய் மூலமாக சொன்னதை

வாக்குமூலமாக எழுதி கொண்டார்கள். அதை நான் படித்து பார்த்து விட்டு கையெழுத்து செய்தேன். மேற்படி புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.68/2020 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name | : | ஆதித்யன் |
| Father's/Husband Name: | | கலியபெருமாள் |
| Village | : | கொளத்தூர் |
| Taluk | : | ஆலத்தூர் |
| Age | : | 21 /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.06.2022

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து வருகிறேன். கொளத்தூரில் சவுண்ட் சர்வீஸ் கடை வைத்து இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு எதிரி அன்புதுரைக்கு 2 லட்சம் பணமும் 4 பவுன் நகையும் அன்புதுரை மகன் திருமணத்திற்காக கொடுத்து இருந்தார். கொஞ்ச நாள் கழித்து 19.05.2019–ம் தேதி நான் மேற்கண்ட தொகையையும் நகையையும் திரும்ப கேட்க போனேன். நான் அன்புதுரை வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த போது அன்புதுரை தேவடியா பயலே இங்கு வந்து என்ன பணம் கேக்குற பணம் கிடையாது இங்கிருந்து போ என்று சொன்னார். நான் திரும்ப சென்று அம்மாவிடம் சொன்னேன். திரும்ப அம்மா வந்து கேட்டார். எங்கடி கேட்க வந்த தேவடியா இங்க பணம் கேட்க வர என்று எதிரி பானுமதி சொன்னார். திரும்ப பானுமதி எனது அம்மாவை விலக்குமாற்றால் அடித்து விட்டார். அன்புதுரை எனது அம்மாவை முடியை இழுத்து போட்டு அடித்தார். திரும்ப அன்புதுரை இரும்பு ராடை காண்பித்து திரும்ப பணம் கேட்டு வந்தால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார். என்னை அன்புதுரையும் அவரது மகனும் அடித்தார்கள். நாங்கள் உடனே இருசக்கர வாகனத்தில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தோம். அதன்பிறகு போலிசார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.